12.11.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 20/2019

அ.சா.17

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | | |
| த/பெ | கங்காதரன் | | |
| கிராமம் | பெரும்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 41/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 28.06.2018ந் தேதி திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியிலிருந்த போது அப்துல்ஜபார் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய, எங்கள் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தினை விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் சவகிடங்கில் இருந்த பிரேதத்தினை அடையாளம் காட்டி வேண்டுகோள் கடிதத்தினை மருத்துவரிடம் ஒப்புவித்தேன். பிரேத பரிசோதனையின் போது உடனிருந்து மருத்துவருக்கு உதவியாக இருந்தேன். பிரேதத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை அன்றைய தினமே விழுப்புரம் வட்டார தடய அறிவியல் ஆய்வக தடய இயக்குனரிடம் ஒப்புவித்தேன். இது சம்மந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**1,4 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**2 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

3 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

5 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை இல்லை.